4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

19-9-1991 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் திரும்பாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமேஸ்வரம் மீனவர்கள் காணாமல் போயிருப்பது பற்றிய பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையின் விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதியை நான் கொடுத்திருக்கிறேன்.

முற்பகல் 10-20

இது பற்றி என்னுடைய கவனத்திற்கு திரு. கே. ஆர். இராமசாமி, திரு. ஆண்டித் தேவர் அவர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1991 மாலை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் படகுகளில் 5 படகுகள் திரும்பவில்லை என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது. இந்த 5 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை. அவர்களை இலங்கை கடற்படையோ அல்லது இந்திய கடற்படையோ பிடித்து வைத்திருக்கலாம் என்று ராமேஸ்வரம் பகுதி மீனவர் சங்கத்தினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். காணாமல் போன மீனவர்களையும், படகுகளையும் உடனே தேடிக் கண்டு பிடிக்க இந்திய கடற்படையின் ஹெலிகாப்டர் உதவி நாடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை இது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத்துறை.

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.